**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 110/2019**

Deposition of Witness for Prosecution

Defence PW

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr.Suresh
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 22nd day of August 2019.

**22/08/2019.**

**S.C.No.110/2019** **PW** Tr.Suresh

**முதல் விசாரணை**

நான் சென்னை மடிப்பாக்கத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பி ஏ வரை படித்துள்ளேன். என் சொந்த ஊர் திருச்செந்தூர் தாலுக்காவில் உள்ள பூச்சிகாடு கிராமம் ஆகும். நான் 2008 லிருந்து அருணா நடராஜ் லாட்ஜில் மேலாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி லாட்ஜ் மேற்கு தாம்பரத்தில் கதவு விலக்க எண்.9, இராஜாஜி சாலை என்ற முகவரியில் உள்ளது. மேற்படி லாட்ஜில் மொத்தம் 22 அறைகள் உள்ளன. எனக்கு மாதம் ரூ.8,000 சம்பளம் ஆகும். எங்கள் லாட்ஜில்2 ஷ்பிட்டுகள் உள்ளன. அதில் ஷப்ட்டுகள் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 வரையிலும், இரண்டாவது ஷீப்ட் இரவு 8.00 மணி முதல் காலை 8.00 மணி வரையிலும் உள்ளது. 4.9.2014ந் தேதி காலை 6.30 மணிக்கு ஜி சிவகுமார் என்ற நபர் ரூம் போட்டார்கள். அவர்களுக்கு அறை எண்.121 ஒதுக்கப்பட்டது. இரண்டு நபர்கள் வந்தார்கள். ரூ.1500 முன்பணமாக பெற்றுக் கொண்டேன். 8.00 மணிக்கு என் பணி முடிந்ததால், நான் சென்றுவிட்டேன். அன்றைய தினம் இரவு 8.00 மணிக்கு என் ஷப்ட்டிற்கு நான் பணிக்கு வந்தேன். 11.40 மணியளவில் ரூம்மை காலி செய்தார்கள். பின்பு அவர்கள் சென்றுவிட்டார்கள். 2 மாதங்களுக்கு பின்பு காலை விசாரணைக்கு வரவேண்டுமென்றும், லாட்ஜில் பதிவேடுகளை கொண்டுவரும்போது சி பி சி ஐ டி அலுவலகத்திற்கு வரும்படி சொன்னார்கள். நான் பதிவேடு எடுத்து சென்று விபரத்தை சொன்னேன். நீதிமன்றத்தில் இருக்க கூடிய பதிவேடு அருணா நடராஜ் லாட்ஜில் உள்ள பதிவேடு ஆகும். அதில் பக்கம் 129ல் ரூம் எண்.121ல் சிவகுமார் , திருநெல்வேலியை சேர்ந்தவர் என்றும், அலுவல் சம்பந்தமாக வந்திருப்பதாகவும் பதிவு எழுதியுள்ளேன். அதில் இரண்டு ஆண் நபர்கள்

இருப்பதாகவும் குறிப்பிட்டு அந்த பதிவில் மேற்படி சிவகுமார் என்பவர்



கையொப்பம் செய்துள்ளார். பக்கம் 129ல் உள்ள **மேற்கூறிய பதிவு அசாஆ 19 ஆகும்.** சி பி சி ஐ டி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ1 மற்றும் எ2, எ5 தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்கள் லாட்ஜில் ரூம் போடுபவரின் முகவரி உறுதி செய்யும் ஆவணம் பெற்றுக் கொள்வோம். முதல் விசாரணையில் நான் கூறிய சிவகுமார் என்பவரின் முகவரிக்கு ஆவணம் பெற்று கொண்டேன். எந்த ஆவணத்தை மேறபடி நபரின் வாங்கினார் என்றால் ஓட்டுநர் உரிமம் மற்றும் வாக்காளர் அடையாளம் பெற்றிருப்பேன். மேற்படி, வாக்காளர் அடையாள அட்டையோ அல்லது ஓட்டுநர் உரிமத்தையோசி பி சி ஐ டி அலுவலகத்தில் ஒப்படைத்தேனா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. ஒப்படைத்து இருப்பேன். மேற்கூறிய ரூம்மில் புக் செய்வதற்கான ரசீது வழங்கி உள்ளேன். அந்த ரசீது புக்கின் அடிக்கட்டை போலிசாரிடம் ஒப்படைத்தேன். பொதுவாக ரூம்மை காலி செய்யும்போது அதற்கான பில்லை தயாரித்து வைத்திருப்போம் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பந்தமாக நான் கூறிய நபர் காலி செய்யும்போது தயாரித்த பில்லின் நகலை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஞாபகம் இல்லை. பக்கம் 129ல் அசாஆ 19ல் கண்ட முதல் நான்கு Entry பதிவுகளில் மாதம் திருத்தி எழுதபட்டுள்ளது என்றால் சரிதான். அசாஆ 19 பதிவேட்டையிலுள்ள குறிப்பை நான் தான் எழுதினேன் என்பதை உறுதி செய்யும் வகையில் என் கையொப்பம் எதுவும் செய்யபட்டுள்ளதா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதேதியில் லாட்ஜில் பணி புரிந்தேன் என்பதை காண்பிக்கும் வகையில் ஆவணங்கள் எதுவும் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் ஞாபகம் இல்லை.

எங்கள் லாட்ஜில் வருகை பதிவேடு மற்றும் பணி பதிவேடு எதுவும் பராமரிக்கப்படவில்லை. போலிசார் கேட்டு கொண்டதிற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், தேவையான தயாரிக்கப்பட்ட ஆவணங்களை வைத்து போலிசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்



சரியல்ல. அருணா லாட்ஜில் பராமரிக்கபடும் அசல் ஆவணங்கள் எதையும் நான் கொடுப்பதில்லையென்றாலும், போலிசாருக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 110/2019**

Deposition of Witness for Prosecution

Defence PW

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr.Mohammed Rafiqkudin
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 22nd day of August 2019.

**<u>22/08/2019.</u>**

**<u>S.C.No.110/2019</u>** **<u>PW</u>** Tr.Mohammed Rafiqkudin

**<u>முதல் விசாரணை</u>**

நான் அண்ணா நகர் எண்.11/6, வட்ட வடிவில் நகரில், சென்னை - 14 என்றமுகவரியில்குடியிருக்கிறேன். நான் பியூசி வரை படித்துள்ளேன். லாரியை எடைபோடும் Weigh Bridge ல் போரூர் Perfect Wear Bridge ல், பணிபுரிந்து வருகிறேன். அதில் மொத்தம் 4 நபர்கள் வேலை செய்கிறோம். எனக்கு ரூ.8000 மாத சம்பளம் இருக்கும். 04.09.2014ந் தேதியன்று எண். எம் எச் 04 FU 6952 என்ற டிரக் காலை 11.49 மணிக்கு ஒரு வண்டியை அனுப்பி வைத்தோம். அந்த வண்டியின் எடை 34 டன்னிற்கு மேல் இருந்தது. அதற்கு charge ரூ.140/ வாடகைக்காக வாங்கினோம். பில் போட்ட பின்பு வாகன எண்ணில் திருத்தம் இருந்தது. அதனால், அதை திருத்திவிட்டு முத்திரையிட்டு கையெழுத்து போட்டேன். அதே மாதம் 9ந் தேதி சிபிசிஐடி போலிசாரிடமிருந்து மதன்ராஜ் என்பவர் கூப்பிட்டு வந்து விசாரணை செய்து போனார்கள். அந்த வண்டியில் என்ன லோடு இருந்தது என்பது எனக்கு தெரியாது. **நீதிமன்றத்தில் இருக்க கூடிய பில்தான் நான் வழங்கியது ஆகும். அது அசாஆ 20 ஆகும்.** அதில் 11 என்று குறிப்பிட்டுள்ளது ஏற்றபட்ட லோடுற்கான குறியீடு ஆகும். ( மேற்படி பில்லானது கணிணியில் இருந்து

எடுக்கபட்டது என்பதால் பிரிவு 65 (B) சாட்சிய சட்டத்தின் படி சான்றிதழ் வைக்கப்படாததால் அதற்கு ஆட்சேபனை தொவிக்க்பபட்டுள்ளது, மேற்படி ஆட்சேபனைக்கு இறுதி விசாரணையில் முடிவு செய்யப்படும்). சிபிசிஐடி போலிசார் எனது விசாரணையில் பில்லின் அசலை பெற்றுக் கொண்டார்கள்.



**<u>10 மற்றும் 12ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ரூ140 பெற்றுக் கொண்டதற்கான பில்லை போலிசாரிடம் ஒப்படைத்துள்ளேன். அசாஆ 20 ஆவணமானது கணிணியில் தயாரிக்கபட்ட பில் என்றால்சரிதான். நான் பில்லை வாகன எண். கையால் திருத்தபட்டுள்ளது என்றால் சரிதான். போலிசார் கேட்டு கொண்டதிற்கிணங்க அசாஆ 20 பில்லை நான் தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்ல கூடிய மதன் என்ற மதன்ராஜ் என்பவர் எதற்காக எடைமேடை அழைத்து வரபட்டார் என்பது எனக்கு தெரியாது. அந்த எடைமேடையின் உரிமையாளர் நான் இல்லையென்றால் சரிதான். போலிசார் கேட்டு கொண்டதிற்கிணங்க அவருக்கு பவ்வியபட்டு பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொய்யான வாகனம் எண்ணை எழுதி அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 110/2019**

Deposition of Witness for Prosecution

Defence PW

Court I Additional District Court, Tiruvallur.

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. அறிவழகன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 22nd day of August 2019.



**22/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 22 Tr. அறிவழகன்

**முதல் விசாரணை**

நான் கும்பகோணம், சாக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். என் தகப்பனார் பெயர் கிருஷ்ணமூர்த்தி. என் அம்மா பெயர் ஜெயா, எனக்கு இரு அண்ணன்கள் இருக்கிறார்கள். என் மனைவி பெயர் கயல்விழி. நான் 8 வருடமாக Wartsina India Private Limited என்ற நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். எனது வண்டி எண். டி வையூ 02 கே 9036 என்ற பல்சர் 150 சி சி என்ற வாகனத்தை என் சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்தி வருகிறேன். 24.11.2014ந் தேதியன்று சிபிசிஐடி அலுவலகத்தில்இருந்து விசாரணைக்கு

ஆஜராகுமாறு கடிதம் வந்தது. அந்த கடிதத்தின் பேரில் 27.11.2014ந் தேதியன்று சிபிசிஐடி அலுவலகத்திற்கு வந்தேன். அன்று இந்த வழக்கிற்கு சம்பந்தபட்டவர்களை செல்வம், செல்வகுமார், மதன்ராஜ் இவர்களை காண்பித்து எனக்கு தெரியுமா என கேட்டார்கள். அதற்கு நான் அவர்களை பார்த்ததில்லையென்றும், அவர்களுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லையென்றும் கூறினேன். ஆனால் அதற்கு அவர்கள் பி வை 02 9036 என்ற எண்ணை பயன்படுத்தியுள்ளதாக என்னிடம் கூறினார்கள். ஆனால் மேற்கூறிய வண்டி 09.08.2011ந் தேதி வாங்கிய தேதியில் இருந்து என் சொந்த உபயோகத்திற்கு மட்டும் தான் பயன்படுத்தி வந்தேன். குறிப்பாக, 1.9.2014ந் தேதியன்று 09.10014ந் தேதியின் இடைபட்ட நாட்களில் வண்டியை நான் யாரிடமும் கொடுக்கவில்லையென்றும், எனது வண்டியின் அசல் ஆவணங்களை சிபிசிஐடி போலிசாரிடம் காண்பித்து அதன் நகல்களை அவர்களிடம் ஒப்படைத்தேன். சிபிசிஐடி போலிசார்என்னை விசாரித்தார்கள்.



**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் எனது வாகனத்தை பார்வையிடவில்லை. வாகனத்தில் உள்ள இன்சீன் எண் மற்றும் Chasis எண்ணையும் ஆவணங்களில் உள்ள எண்களையும் போலிசார் சரிபார்க்கவில்லை. முதல் விசாரணையில் சொன்ன தேதிகளில் நான் சொன்ன இடங்களுக்கு போக வாய்ப்பு இல்லையென்று தனிப்பட்ட நபரின் சாட்சியாக காண்பிக்கவில்லையென்றும், மற்றும் அது சம்பந்தபட்ட ஆவணங்களையும் கொடுக்கவில்லை. போலிசார் கேடடு கொண்டதின் பேரில்

வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW 23

Court I Additional District Court, Tiruvallur.

Name : Thiru. பாலகிருஷ்ணன்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 22nd day of August 2019.



**22/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 23 Tr. பாலகிருஷ்ணன்

**முதல் விசாரணை**

நான் எண்.130, வேளச்சேரி மெயின்ரோடு, காமாராஜபுரம் என்ற

முகவிரியில் குடியிருக்கிறேன். என்னுடைய சொந்த ஊர் தூத்துகுடி மாவட்டத்தை சேர்ந்த ஆறுமுகநெறியாகும். இவ்வழக்கில் ஆஜர் 1ம் எதிரி செல்வம் எனது சொந்தகாரர். வேறு எந்த விபரமும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டபடும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். சிபிசிஐடி அலுவலகத்தில் இருந்து என்னை அழைத்தார்கள். செல்வம் என்பவரை தெரியுமா என கேட்டதற்கு அவர் என் மச்சான் என்று சொன்னேன். அவர் மீது வழக்கு உள்ளது என்றம்அதை பற்றி விபரம் தெரியுமாஎன கேட்டார்கள். நான் தெரியாது என சொல்லவிட்டேன். என்னை அவர்கள் அனுப்பிவிட்டார்கள். என்னிடம் காட்டபடும் குவிமுச 164ன் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும்அசாஆ 21 வரிசையாகும். ( 4 எண்ணிக்கை )

(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக கருதமால் சாட்சியிடம் ஆவணத்தைகாண்பிக்க கூடாது என்று எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் நீதிமன்றத்தில் அனுமதியுடன் சாட்சிக்கு ஆவணத்தை காண்பித்தள்ளார்கள். அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் குறியீடு செய்யப்படுகிறது. ஆட்சேபனை குறித்து இறதி விசாரணையில் உறுதி செய்யப்படும்)

கற்றறிந்த அரசு தரப்புகூடுதல் குற்ற துறை வழக்கறிஞர் இந்த சாட்சியை அரசு தரப்பு பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதியின் பேரில் அரசு தரப்பின் குறுக்கு விசாரணை)

போலிசு விசாரணையின் போது எனது சொந்த ஊர் ஆறுமுக நெறி. எனது தங்கையின் பெயர் கிருஷ்ணாலேகா என்றும், அம்மாவுடன் பிறந்தவர் நான் சென்னை போரூர் ரவுண்டனா அருகில் உள்ள தங்கம் ஸ்டோரில் ளுயடநள மேனாக வேலை செய்து வந்ததாகவும், அதற்கு பிறகு டி சி டபள்யூ என்ற கம்பெனியில் வேலை செய்து வந்ததாகவும், பின்பு ஆலந்தூரில் உள்ள மாங்கபாளியம்மன் கோவில் தெருவிலுள்ள மளிகை கடையில் வேலை செய்து வந்ததாகவும், நான் பாலா டிரான்ஸபோர்ட் என்ற பெயரில் குயையேஉந 3 லோடு வண்டி வாங்கி தொழில் செய்து வந்ததாகவும், டிரான்ஸ"போர்ட் சரிவர

நடைபெறாமல்குடும்ப பிரச்சனை காரணமாக குயைேஉேந யா் பறிமுதல் செய்ததாகுவம் மன உலைச்சலின் காரணமாக செல்வம் என்கறி செல்வம் திருநெல்வேலியை சோ்ந்த சிவகுமாா் ன்பவருடன் சோ்ந்து கொண்டு யூ பி எஸ்" பேட்டரி தயாா் செய்து விற்பனை செய்து வந்ததாகவும், தூத்துகுடி புன்னங்காயல்சோ்ந்த தாஸ் மற்றும் ஐயப்பன் ஒயின் ஷாப் பாா் நடத்தும் பழனி என்பவரை மதன் தங்கி வந்த வீட்டில் அடிக்கடி சந்தித்து பேசுவதாகவும் அடிக்கடி மது அருந்துவதாகவும் எம் பி தோ்தலின்போது அவா்கள் என் ஊருக்கு வந்து என்னிடம் பழக்கமானதாகவும், சிவகுமாா் உட்பட யாரும் குடும்பத்துடன் சோ்ந்து வாழவில்லையென்றும், குடும்ப பிரச்சனை எப்படி தீா்பப்து என்ற முடிவு சயெ்து செல்வத்துடன் 3.8.2014ந்தேதி என் செல் எண்ணிடமிருந்து செல்வத்திற்கு 9790550800 என்ற எண்ணிற்கு போன் செய்ததாகவும், அப்போது இராமபுரம் மெகா மாா்ட்டிற்கு வரும்போது செல்வம் சொன்னதாகவும், நான் மாலை 5.15 மணியளவிலற்கு சொன்ன இடத்திற்கு வந்ததாகவும், செல்வம் பைக்கில் வந்து என்னை இராமபுரம் திருவள்ளூா் சாலை அருகிலுள்ள அந்தோணி என்பவரது இரும்பு தொழிலுக்கு அழைத்து சென்றதாகவும், அந்த இடத்தில் ஏற்கனவே செல்வகுமாா்தாஸ் சிவகுமாா் சேட்டு திருமணி ,அந்தோணி, விஜயமோகன், லோகநாதன், மற்றும் மதன்ராஜ் ஆகியோா்கள் இருந்ததாகவும், ஏற்கனவே பழக்கமானதால் புதிததாக சேட்டு, லோகநாதன், அந்தோணி விஜயதேமாகன்அவா்களை அறிமுகம் செய்து வைத்ததாகவும், நான் செம்பாக்கம் வியபாாரி சங்க தலைவா் ராதாகிருஉ்7ணன் டிரைவலாக வேலை செய்ததாகவும், எனது மச்சான் ஒரு நல்ல திட்டம் இருப்பதாக தெரிவித்து தூத்துகுடி ஞுவநசடவைலிருந்து கூசயைடநச லாாி மூலம் ஊடிீநச தகடுகள் வட இந்தியாவிற்கு செல்வதை தவிா்த்து சென்னைக்கு கொண்டு வந்து விற்பனை செய்ததாகவும், குடும்பத்தில் செட்டில் ஆகிவிடலாம் என சொன்னதாகவும், அங்கிருந்தவா்கள் தனிப்பட்ட ஐடிக்களை சொன்னதாகவும், கடத்தல் திட்டத்திற்கு சம்மதம் தெரிவித்ததாகவம், செல்வம், செல்வகுமாா், தாஸ், சேட்டு, இவா்கள் தூத்துகுடி ஞுவநசடபைாவ சென்று தகவல்சேகாிப்பதாகவும், லோகநாதன்

என்பவர் கடத்தல் தொழிலுக்கு பயன்படுத்த வாகனம் ஏற்பாடு செய்ததாகவும், மதன் , திருமேணி, அந்தோணி, விஜயமோகன், ஆகியோர்கள் டிரைலர் லாரியுடன் கடத்தி வரும் ஊடீநச தகடுகளை விற்பனை செய்து தருவதாகவும் முடிவு செய்ததாகவும், என்னைசெல்வம் அழைத்தார் என்றும், வரமுடியாது என சொல்லவிட்டு தலைவருக்கு தெரிந்தால் பிரச்சனையாகிவீடும் என சொன்னதாகவும் ,அவர் என்னுடைய மனைவி பிரச்சனைக்க என்ன தீர்வு என கேட்டதாகவும், அதனும் பார்க்கவில்லையென்று சொன்னதாகவும், செல்வம் எனக்கு மச்சான் என்பதால்அவர்கள் பேசி திட்டம் பற்றி யாரிடமும் வெளியில்சொல்லகூடாது என சொன்னதாகவும், நான் வெளியில் யாரிடமும் சொல்லாம் இருந்ததாகவும்,இ ஒருமாதம் கழித்து திட்டபடி 5.9.2014ந் தேதி செல்வம் மற்றம் அவர்களுடைய கூட்டாளிகள் டிரைலர் லாரியை சென்னைக்கு கடத்தி வந்து ஊடீநச தகடுகளை விற்பனை செய்யவேண்டுமென்று ராயல் நகர போலிசார் செல்வம், செல்வகுமார், சேட்டு, சிவகுமார் , திருமணி, லோகநாதன் என்பவரை கைது செய்து சிறைசாலைக்கு அனுப்பியதாகவும், அவர்களை விசாரணை செய்து வருவதாகவும், தொலைகாட்சியலும் செய்திதாள்களிலும் தகவல் அறிந்து நான் அதிர்ச்சிஅடைந்ததாகவும், பின்னர் சிபிசிஐடி அவர்கள் என்னை விசாரணைக்கு அழைத்ததாகுவம், விசாரணைக்கு ஆஜராகி அத்தனையும் சொல்லவிட்டு மச்சானை செல்வத்தை காப்பாற்றவேண்டுமென்று என எதிரிக்கு பவ்வியபமட்டு அம்பத்தூர் நீதிமன்றத்தில் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று அதிலும் என்னுடைய கையெபத்து பெற்றிருக்கறிர்கள் அந்த விபரத்தை மறைத்துஅதற்கு இணங்கி தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Sd/-Deepthi Arivunithi

Taken to my dictation and corrected

by me to open court read over to the witness
and admitted by him as correct.

Sd/-Deepthi Arivunithi
I Addl.Dist.Judge,
I Additional District court,
Tiruvallur.